பணி முழுமை பெறவில்லை என்பது மாத்திரமல்ல, துவங்கப் பட்ட நிலையிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, வருகின்ற காலம் மழைக்காலமாக இருக்கிற காரணத்தால், விரைந்து அந்தப் பணியை முடித்து வைக்கவும், அதேநேரத்திலே அந்தக் கலுங்கலிலிருந்து உபரி நீர்க் கால்வாய் அமைப்பதாக சொல்லப் பட்டுள்ளது, அதற்கு எவ்வளவு நிதி மதிப்பீடு செய்யப்பட்டிருக் கிறது, அந்தப் பணி எப்போது துவங்கப்படும் என்பதையும் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டப் பணியை வேகமாக ஆரம்பித்து, முடிக்க வேண்டும் என்ற உணர்வை அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். புதிதாக கலுங்கல் கட்டுவதற்கு முன்பாக தண்ணீர் உள்ள அந்தப் பகுதியிலே கரையை வெட்டவேண்டியதாக இருப்பதால் வளைவாக அந்த மண் அணைப்பை இப்போது அமைத்திருக் கிறார்கள். வேகமாக வேலையைச் செய்ய வேண்டும் என்ற உணர்வை அந்த அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். கால்வாய் வெட்ட வேண்டுமென்று சொன்னாலும், அதற்கு நிரம்பப் பணம் ஆகும் என்பதால், நிதிநிலைமை சீரான பிறகு அந்த வேலையை எடுக்கலாம் என்று வைத்து இருக்கிறோம்.

(ஒ) இராமாநதி நீர்த்தேக்கத்தின் ஆயக்கட்டுகளை விஸ்தரித்தல்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "இராமாநதி அணையில் வீணாகப் போகும் தண்ணீரை சேர்வைக்காரன்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கேளையாப்பிள்ளையூர் குளத்திலிருந்து அணைந்த பெருமாள் நாடானூர் ஊராட்சியிலுள்ள அனைத்து மானாவாரிக் குளங்களுக்கும் கால்வாய் வெட்டிக் கொண்டு வந்தால் சுமார் 250 ஏக்கர் நிலம் நிரந்தர பாசன வசதி பெற ஏதுவாவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 22

அறிக்கை.

இராமாநதி தாமிரவருணியாற்றின் உபகிளை நதியாகும். இது ஜம்புநதியுடன் சேர்ந்து (ஜம்புநதி சங்கமத்திற்குப்பின் இது வீராநதி என்று அழைக்கப்படுகிறது) பின் கடனா நதியுடன் இணைகிறது. கடனா நதி, தாமிரவருணியுடன் அதன் மூன்றாவது அணைக்கட்டுக்குக் கீழே இணைகிறது. தாமிர வருணியின் மூன்றாவது அணைக்கட்டுக்குக் கீழே உள்ள ஆயக்கட்டு சுமார் 68,000 ஏக்கர், இராமாநதி நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு சுமார் 4500 ஏக்கர்.

இராமாநதி நீர்த்தேக்கத்தின் 4500 ஏக்கர் ஆயக்கட்டுப் பாசனம் போக உபரியாகும் நீர் தாமிரவருணியின் அணைக் கட்டுகள் மூலம் திருப்பிவிடப்பட்டு ஆயக்கட்டுகளின் பாசன வசதிக்கு உபயோகமாவதால், இது வீணாகும் சூழ்நிலை ஏற்படுவது இல்லை.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இராமாநதி சிறிது தூரத்தில் தாமிரவருணிநதியுடன் சேர்ந்தபிறகு கீழே உள்ள சுமார் 68 ஆயிரம் ஏக்கருக்கு பாசன உதவி செய்வதாக அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இராமாநதி நீர்த்தேக்கத்தின் மூலம் சுமார் 4,500 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறுகிறது. இந்த இராமாநதிக்கு பக்கத்திலேயே சேர்வைக் காரன்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த மானாவரி குளங்கள் இருக்கின்ற காரணத்தால் அந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குளங்களுக்கு இந்த இராமாநதித் தண்ணீரை கொடுத்தால் சுமார் 250 ஏக்கர் நிலம் நிரந்தர பாசன வசதி பெறுகிறது. தாமிரவருணிக்குக் கீழே உள்ள 68 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு இந்த இராமாநதித் தண்ணீர் போய்தான் விளையவேண்டு மென்பதில்லை. அதற்கு கடனா நதி, மணிமுத்தாறு, தாமிர வருணி முதலிய அணைகளிலிருந்து ஏராளமான தண்ணீர் வருவதன்மூலம் அந்த ஆயக்கட்டுகளெல்லாம் விளைச்சல் பெறும். ஆகையால், இந்த இராமாநதி பக்கத்திலுள்ள சேர்வைக்காரன் பட்டி ஊராட்சி மானாவரி குளங்களுக்கு இந்த இராமாநதி யிலிருந்து தண்ணீரைக் கொடுக்க அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

1987 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாமிர வருணி அணைக்கட்டுத் திட்டத்திலே மொத்தம் 8 ஆயக்கட்டுகள் இருக்கின்றன. 11 வாய்க்கால்களிலிருந்து தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த இராமாநதி என்பது மூன்றாவது அணைக்கட்டுக்குக் கீழே வந்து இந்த நதி சேர்ந்துகொண்டு இருக்கிறது. பொதுவாக தாமிரவருணியைப் பொறுத்த அளவிற்கு, கடலிலே போய் தண்ணீர் சேருவதில்லை. அவ்வளவு தண்ணீரையும் நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். உபரியாக தாமிரவருணியில் தண்ணீர் இல்லை. இராமாநதி அதனுடைய கிளை நதியாக இருக்கின்ற காரணத்தால் அங்கே அணைக்கட்டு வேண்டுமென்று சொன்னால், தாமிரவருணிக்கு வருகின்ற தண்ணீர் வரத்து குறையும். கீழே இருக்கின்ற ஆயக்கட்டுகள் பாதிக்கும் என்று அதிகாரிகள் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இதை யோசித்துத்தான் செய்ய முடியும்.

(ஓ) தமிழக மீனவர்கள் கேரளக் கடற்பகுதியில் மீன் பிடிக்கத் தடை.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழக மீனவர்கள் கேரள மாநில கடல் பகுதியில் மீன் பிடிக்கக்கூடாது என்று தடை செய்து கேரள முதல்வர் அறிக்கை வெளியிட்டது தொடர்பாக குமரி மாவட்டத்தில் உள்ள சுமார் 500 மீனவர் குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் நவம்பர் முதல் எப்ரல் திங்கள் வரை வறட்சி நிலவுகின்ற காலத்தில் வழக்கமாக அண்டை மாநிலமான கேரளாவில் கடலோரப் பகுதிகளில் மீன்பிடித்தொழில் செய்து வருகின்றார்கள். இந்நிலை கேரளாவில் உள்ள மீனவதொழிலாளர்களின் ஒத்துழைப்